

# ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

## ஸ்ரீ ஆச்சார்யாளின் அம்ருத உபதேசங்கள்



ச்ருங்கேரி சாரதா பீடத்தின் 34வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திர சேகரபாரதி மஹாஸ்வாமிகள் ஆன்மீகத்தின் ஒளிபொருந்திய எடுத்துக்காட்டாக விளங்கினார். இளம் வயதிலேயே தர்மத்திலும் ஸதாசாரத்திலும் ஈர்வரபக்தியிலும் குருபக்தியிலும் அவருக்கு எல்லையில்லாத ஈடுபாடு இருந்தது.

அவருடைய ஸத் குணங்களைப் பற்றி ஸ்மரிக்கும்போது ஸ்வாமி விற்பாரண்யரின் சங்கரவிஜயத்தில் உள்ள ஸ்லோகம் நினைவுக்கு வருகிறது.
द्युवनान्त इवामरद्रुमाः अमरदृष्विव पुष्पसञ्चयाः
भ्रमरा  इव पुष्पसञ्चयेषु अतिसङ्ख्याः किल शङ्करे गुणाः
த்$^3$யுவனாந்த இவாமரத்$^3$ருமா: அமரத்$^3$ரு’ஷ்விவ புஷ்பஸஞ்சயா:
ப்$^4$ரமரா இவ புஷ்பஸஞ்சயேஷு அதிஸங்க்$^2$யா: கில ஶங்கரே கு$^3$ணா:
(சொர்க்கலோகத்தின் எண்ணற்ற கல்பவ்ருக்ஷங்கள். அவற்றைப் போல அவ்விருக்ஷங்களில் உள்ள பூக்களும் அவற்றில் அமரும் வண்டுகளும் கணக்கிலடங்காதவை அதைப்போல சங்கரரிடம் இருந்த தற்குணங்களும் எண்ணற்றவை.)

பால்யத்திலிருந்தே ஸ்ரீநாஸிம்மன் தன்னுடைய படிப்பிலே விசேஷ அக்கறை செலுத்திய ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்மபாரதீ மஹாஸ்வாமிகளின் அனுக்ஷஹத்திற்கு பாத்ரமாக இருந்தார். அவர் ச்ருங்கேரியிலும் பங்களூரிலும் உள்ள பாடசாலைகளில் படித்து சாஸ்திரங்களில் அஸாதாரணமான நிபுணத்வம் பெற்றார். தன்னுடைய இருபதாவது வயதிலே ஸ்ரீசந்திரசேகரபாரதீ மஹாஸ்வாமிகளாக ச்ருங்கேரி சாரதா பீடத்தின் அதிபதியாரி அதனுடைய செயல்பாடுகளில் மிகவும் ஸமர்த்தராக இருந்தார். மஹிமை பொருந்திய ச்ருங்கேரி ஸமஸ்தானத்தின் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தபோதிலும் எவ்விதமான லௌஹீக ஆசைகளுமின்றி எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்கள்.
(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாசந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)



# தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

ஒரு மாதம் கிருஷ்ண பட்சம் (பௌர்ணமியுடன் 15 நாட்கள்), சுக்ல பட்சம் (அமாவாசையுடன் 15 நாட்கள்) என இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பட்சமும் பதினைந்து நாட்கள் உடையதாகக் கொள்ளப்படுகிறது. மகா நித்யாவின் கலைகளில் தோன்றிய பதினைந்து திதி நித்யாக்களும் ஒவ்வொரு பட்சத்திற்கும் ஒருநாள் ஆக மாதத்தில் இரு நாட்கள் இப்பிரபஞ்சத்தை நிர்வகிக்கும் பொறுப்பை மேற்கொள்கின்றனர். தெய்வங்களை கோகுலாஷ்டமி, ராமநவமி போன்ற திதிகளிலும், நீத்தார் கடன்களை அமாவாசை அல்லது அவர்கள் உலகை நீத்த திதிகளிலும் நாம் வழிபட்டு வருகிறோம். ஆனால், அதே நாளில் இந்தத் திதிக்குரிய தேவதைகளை வழிபட மறந்து விடுகிறோம்.



இதனாலேயே நாம் உரிய பலன்களை பெற முடிவதில்லை என்றும் சொல்லலாம். அன்றைய திதிகளை பரிபாலனம் செய்யும் மூல தேவிகளை நாம் மறவாமல் வழிபட்டால் நம்மை வறுமை அணுகாது. அனைத்து சங்கடங்களிலிருந்தும் விடுதலையாவோம். இக பர சுகங்களை நிச்சயமாகப் பெறுவோம். கால ரூபிணியாய் விளங்கும் நித்யா தேவிகளை அந்தந்த குறிப்பிட்ட திதிகளிலே வணங்கி பூஜித்தால் மிகச் சிறந்த நலன்களை

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம்,ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மற்றும் புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரீ அவதூத வித்யாபீடத்தின் பீடாதிபதி ஸ்ரீ ஓம்காரானந்த மஹாஸ்வாமிகள் (தேனி) ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த மஹாசஸ்வாமிகளின் ப்ரதம சிஷ்யரும், புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரீ அவதூத வித்யாபீடத்தின் பீடாதிபதியுமான பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள் 2017 புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரீ விஜய யாத்ரா )

அந்த உபாசனை தரும். பிரதமை முதல் பௌர்ணமி வரைஅப்பிரதட்சணமாகவும், திரும்பவும் அடுத்த பிரதமை முதல்அமாவாசை வரை பிரதட்சணமாகவும் பூஜிக்க வேண்டும். இந்த பதினைந்து தேவிகளுக்கும் நம் அன்றாடப் பணிகளில் ஒரு பணியும், அப்பணி நன்கு நடைபெற ஒரு மந்திரமும், யந்திரமும் நியமிக்கப்பட்டுள்ளன. ஆதிசங்கரரால் பிரசித்தமான 'சுபாகம தந்த்ர பஞ்சகம்' என்ற நூலில் இவர்களின் உபாசனை பற்றி



விளக்கமாக கூறப்பட்டுள்ளது. 'தந்த்ர ராஜ தந்த்ரம்' என்ற நூலிலும் இவர்களின் தியான ஸ்லோகங்கள், யந்திரங்களின் விளக்கங்கள், உபாசனை புரியும் முறை ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன. சர்வம் சக்தி மயம். 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்பதை மெய்ப்பிக்கும் வகையில் திருவருள் பாலிக்கும் இந்த அன்னையர்களின் தோற்றம், வழிபடும் நாட்கள், பலன்கள் என்னென்ன? என்பதை அறிவோம்.



**1.**காமேஸ்வரி

'காம' எனில், விரும்பிய ரூபத்தை எடுக்கக் கூடியவள் என்று பொருள். இவள் கோடி சூர்ய பிரகாசமாக ஜொலிக்கும் தேக காந்தி உடையவள். மாணிக்க மகுடம் தரித்து, பொன்னாலான மரகத மாலை, ஒட்டியாணம் போன்ற விலை மதிப்பில்லா அணிகலன்களை அணிந்துள்ளாள். முக்கண்கள், ஆறு திருக்கரங்கள் கொண்டவள். தன் திருக்கரங்களில் கரும்பு வில், மலரம்புகள், பாசக்கயிறு. அங்குசம், அமிர்த பாத்திரம் மற்றும் வரத முத்திரை தரித்து உள்ளாள். பிறை சூடிய திருமுடியைக் கொண்ட இந்த அம்பிகையின் புன்சிரிப்பும், கருணை பொழிந்திடும் கண்களும், கேட்கும் வரங்களை வாரி வழங்கவல்லவை.

மந்திரம்**:** ஓம் காமேஸ்வர்யை வித்மஹே நித்யகலின்னாயை தீமஹி தன்னோ நித்யா ப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்**:** சுக்ல பக்ஷ பிரதமை, அமாவாசை.

வழிபடு பலன்கள்: குடும்பத்தில் ஆனந்தம், தனவரவு, மனநிறைவான தாம்பத்ய வாழ்க்கை அமையும்.
(தொடரும்...)
ஷண்மதம் **-** ஆறு பிரிவுகள்**,** தொடரின் தொடர்ச்சி அடுத்த மாதம் வெளிவரும் என்பதை தெரிவித்து கொள்கிறோம்



# நவராத்திரி

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)



சாக்த சமயம் என்பது அம்பிகையின் வடிவங்களை பிரதானமாகக்கொண்டு பூஜிப்பது. இதில் அன்னைக்கு நவராத்திரி என்பது மிகவும் விசேஷமாகக் கருதப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் நான்கு நவராத்திரிகள் கொண்டாடப்படுவதை நாம் கண்டோம். தை மாதத்தில் தை மாத அமாவாசை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுவது சியாமளா நவராத்திரி. சியாமளா என்றும், 'ஸ்ரீ ராஜ சியாமளா என்றும், ஸ்ரீமாதங்கி என்றும், 'மஹாமந்திரிணி' என்றும் பலவித திருநாமங்களால் போற்றப்படும். ஸ்ரீ அம்பிகை மதங்க முனிவரின் தவப்புதல்வியாக அவதரித்தருளியவள். கலைகள், பேச்சுத்திறன் நேர்வழியில் செல்லும் புத்தி, கல்வி, கேள்விகளில் மிக உயர்ந்த நிலையை அடையும் திறன் ஆகியவற்றுக்கு அதிபதியாக அறியப்படுபவள். வேத மந்திரங்களுக்கு எல்லாம் அதிதேவதை ஆதலால் மந்த்ரிணீ என்று அறியப்படுபவள். ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியின் மஹாமந்திரியாக. இவ்வுலகை ஆட்சி செய்து அருளுபவள், இந்த அம்பிகையைப் போற்றும் விதமாகவே சியாமளா நவராத்திரியைக் கொண்டாடி வழிபடுகிறோம். இராஜ சியாமாளவின் தோற்றத்தை காளிதாசர் தன்னுடைய ஸ்யாமளா தண்டகம் என்ற நூலின் தியானத்தில் அழகாக வருணித்துள்ளார்.

"மாணிக்ய வீணாம் முபலாலயந்தீம் மதாலஸாம் மஞ்சுளவாக் விலாஸாம்
மாஹேந்தர நீலத்யுதி கோமளாங்கீம் மாதங்க கன்யாம் மனஸா ஸ்மராமி ||



சதுர்புஜே சந்த்ரகலாவதம்ஸே குசோன்னதே குங்கும் ராகஸோனே | புண்ட்ரேக்ஷு பாஸாங்குஸ புஷ்ப்பாண - ஹஸ்தே நமஸ்தே ஜகதேக மாத: ||

மாணிக்க கற்கள் பதித்த வீணையை வாசிக்கும் விருப்பம் உடையவள். பச்சை நிறம் கொண்டவள். மதங்க முனிவரின் புதல்வி. நான்கு திருக்கரம் உடையவள் பாசம், அங்குசம், மலர் அம்பு கொண்டவள். சந்திர கலை தலையில் அணிந்தவள். குங்கும சாந்தை மார்பில் தரித்தவள் என்று அம்பிகையின் தோற்றத்தை வருணிக்கிறார்.

அம்பிகையின் கையில் கிளியும் இடம்பிடித்திருகின்றது. இது வாக்கு திறமையை குறிக்கிறது. இவளின் நிறம் பச்சை ஆகும். பச்சை புதனுக்குரிய நிறம் இது ஞானத்தை குறிக்கிறது.

சியாமளா உபாசனை



சியாமளாவை உபாசிப்பவர்களுக்கு வாக்கு பலிதம், கல்வி, வித்தை, நுண்ணறிவு, எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் தன்மை, ஞானம், ானம்பு மனதை ஒருநிலை படுத்தும் திறன், புத்தி கூர்மை, இசை, தேர்வில் வெற்றி போன்றவை தானாக வந்து சேரும். இவளை உபாசிப்பது அவ்வளவு சுலபமல்ல விஷயம் என்று தாந்திரீக நூல்கள் கூறுகின்றன

சரஸ்வதி தேவியின் தாந்த்ரீக ரூபமே ஸ்ரீ ராஜ சியாமளா தேவி. கலைத் தெய்வம் என்றே சொல்கிற சரஸ்வதி கையில் வீணை இருக்கிறது. வீணைதான் நம் ஸங்கீதத்துக்கே ஜீவநாடி என்பார்கள். அதனால் ஒவ்வொரு தெய்வத்துக்கும் உள்ள வீணைக்கென்று ஒரு பெயர் உண்டு. 'கச்சபி' என்பது சரஸ்வதியின் வீணை. சங்கீத தேவதையாகச் சொல்லும்போது ராஜ மாதங்கி, ராஜ சியாமளா என்று பெயர். இவளும் சரஸ்வதியைப் போலவே கையில் வீணை வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறது. சரஸ்வதி நல்ல வெளுப்பு. இவளே சாம்பல் கறுப்பு. அதனால்தான் 'சியாமளா' என்று பெயர்.சியாமளா நவராத்திரியில் ஐந்தாவது தினமான வசந்த யில் ஸ்ரீ சரஸ்வதி தேவி திருஅவதாரம் செய்ததாக ஐதீகம். தெ 6 / 21 விஜயதசமி போல், வடநாட்டில் வசந்த பஞ்சமி அன்று வித்யாரம்பம் செய்கிறார்கள். அன்றைய தினம் அம்பிகையை வழிபடுபவருக்கு. கலைகள் அனைத்திலும் நிறைந்த பேராற்றல் கிட்டும்.

(தொடரும்.....)



# தசமஹா வித்யா

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

**7.** துயர் துடைப்பாள் தூமாவதி : சின்னமஸ்தாவிடம் எந்த அளவு வேகம் பொங்குகிறதோ, அந்த அளவு சோம்பி, சோம்பிக் கிடப்பவள் ஒருத்தி உண்டெனில், அவளே தூமாவதி.



ஒன்று அழிவதற்கும் மற்றொன்று உண்டாவதற்கும் இடையில் செயலற்றதோர் இடைவெளி உண்டல்லவா? அதுவே இவள்.

இது உண்மையில் பாழிடம்தானா? ஒன்று நிறைவும் அதில்தான். இன்னொன்றின் வித்தும் அதில்தான், அதை எப்படி சூனியம் எனலாம்?

எனவேதான் இவளை 'இருட்சக்தி' என்று சொல்லாமல் 'புகை சக்தி' என்பர். (தூபம் - புகை), புகை, இருள் போலத்தான் இருக்கிறது. ஆனால் ஒளிமய அக்கினி இன்றி இது இல்லையே! மகா விஷ்ணுவின் யோக நித்திரை இவளேயாவாள். இது ஆக்க சக்தி அல்லவா! இதனால்தான் இவள் வெளிறிப் போனவளாகச் சித்தரிக்கப்படுகிறாள்.

இவள் தளர்ந்தவளாக அங்கங்கள் தொங்கித் தளர்ந்து பல் விழுந்து, சீவாத முடியும், அழுக்கு உடையுமாகக் காட்சி தருகிறாள். மேலும் காக்கைக் கொடியையும் கொண்டுள்ளாள். மேலும் ஒரு கரத்தில் முறத்தையும் மற்றொரு கரம் வரம் நல்கும் உத்தம பாவத்திலும் உள்ளாள்.

தூமாவதியானவள் நம் சிந்தனை என்கிற தவிட்டைப் புடைத்து, உண்மை நாமமான ஆத்ம அரிசி மட்டுமே நிற்கிற தூக்க நிலையை நமக்கு என்றென்றும் அளித்துக் களைப்பாற்றும் கருணைத்தாயாக விளங்குகின்றாள்.

இவள் ஒருத்தியே தசமகா வித்யாக்களுள் நெற்றியில் திலகமில்லாது புருஷன் அற்றவள் போல சித்தரிக்கப்படுகிறாள்.

பலன்கள்: ஊர்த்வாம்னாய தந்த்ரத்தில் தூமாவதீ ஸ்தோத்ரம் உள்ளது. அதில் பலச்ருதியில் பெருங்கஷ்டத்திலும், மஹா சங்கடத்திலும், ரோகத்தால் அவதிப்படும் காலத்திலும் சத்ருக்களை நிக்ரஹம் செய்ய நினைக்கும்போதும்






தூமாவதீ ஸ்தோத்ர பாடம் கார்ய ஜயமளிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**8.** சிந்திப்பதை சீராக்கும் பகளாமுகீ : காளி முழுவதையும் அழிக்கின்றாள். பகளாமுகியோ, செயல் முன்னிலும் திறம்பட நடைபெறும் பொருட்டுச் செயலைத் தடைப்படுத்துபவள். பிறகு விட்டு விடுகிறாள்.

மூச்சை இறுக்கிப் பிடித்து தடை போடத்தான். ஆனால் இம்மாதிரி சிறிது போது செய்து பிறகு அதை விட்டால் அதுவே உயிர் வளர்க்கும் பிராணாயாமம் ஆகிறதல்லவா? இப்படிப் பிடித்து வைப்பதனை 'ஸ்தம்பனம்' என்பர். பகளாமுகி தேவியானவள். 'வாக் ஸ்தம்பனக்காரி'. அதாவது பேச்சைத் தடுத்து நிறுத்துபவள். பின்னர் சிந்திக்கச் செய்திடுவாள். இவள் தனது இடதுகையால் ஒருவனின் நாவைப் பிடித்திழுப்பதாகவும் வலது கையால் கதை என்னும் ஆயுதத்தினைத் தாங்கி அவனது சிந்தனையை அடித்து வீழ்த்தத் தயாராக இருப்பதாகவும் சித்தரிக்கப்படுகிறாள்.

'வல்கா' என்றால் 'லகான்'. எதிரியின் வாயில் (முகத்தில் லகான் போட்டு திணர அடிக்கும் வல்கா முகியே வகலாமுகியானதாகச் சொல்வார் உளர்.) வடமொழியின் 'வ'வும் 'ப'வும் ஒன்றுக்கொன்று மாறும்.

பலன்கள்: சத்ரு ஜயம் முக்ய ப்ரயோஜனம். காம க்ரோதாதி அகச் சத்ரு நிக்ரஹமும், சமாதி லாபமும் பிரயோஜனங்கள். சமாதி லாபத்தால் ஆத்ம ஞானமும் மோக்ஷமும் கிடைக்கும். பீதாம்பராதேவியின் அருளால் குபேரன் போன்ற செல்வமும், நல்ல பதவியும், உலகத்தை ஆட்டி வைக்கக்கூடிய சக்தியும் கிட்டும்.

**9.** மங்களமே மாதங்கி: காஞ்சி காமாட்சியை அரசி எனில் அவளது மந்திரிணியாக உள்ளவளே மாதங்கி. ஆனால் இவளே பூரண மகாசக்தியாக சக்ரவர்த்தினியாக மதுரையில் மீனாட்சியாகப் பிரகாசிக்கிறாள்.

பிறக்கும் சங்கீதம் முதலான கலைகளுக்கு அதிதேவதையாவாள். இவள் கரத்தில் பிடித்துள்ள வீணையும் பச்சைக் கிளியுமே இதைச் சொல்லிவிடும். ஒரு நிலையில் மந்திரிணி என்றாலும் இப்போது இவள் ராணி என்பதால்தான் ராஜமாதங்கி ராஜசியாமளா எனப்படுகின்றாள். சண்டாளரான மாதங்கர் மாதவம் புரிந்து மதங்க முனிவரானார். அவர் தவத்துக்கு அருள் கூர்ந்து



அவரது மகளாகப் பிறந்தவளே மாதங்கி. ‘சண்டாளி’ இவள் உயர்வினும் உயர்வானவள் என்பதற்கே ‘உத்சிஷ்ட’ என்ற அடைமொழியும் கொண்டாள்.



பலன்கள்: ஸாதகன் மேற்கூறிய நிபந்தனைகளுடன் மாதங்கீயை உபாஸனை செய்தால் வெகு சீக்கிரத்தில் உலகத்திலேயே சிறந்தவனாக விளங்குவான். உலகத்தையெல்லாம் தன்வசமாகச் செய்துகொள்வான்.

மாதங்கியே ஸர்வசங்கரி அல்லவா! நாதோபாசனையாலும், சாஸ்திர ஞானத்தாலும் அளவு கடந்த செல்வமும் நல்ல புகழையும் மோக்ஷத்தையும் இத்தேவியை தரிசனத்தால் அடையலாம்.

**10.** கைவிடாள் கமலாத்மிகா : இப்பெயரினைச் சொல்லும்போதே இவள் மகாலட்சுமி என்று விளங்கும். பரம்பொருளின் அழகும் ஆனந்தமும் வெளிப்படையாவதையே ‘கமலாத்மிகா’ என்கிறோம்.

ஜீவசாரத்தைக் குறிக்கும் க்ஷீரசாகரத்தில் (பாற்கடல்) தோன்றியவள். அமுதத்துடன் அமுதமனத்தாள். இந்து எனும் சந்திரனின் சகோதரியாம் இந்திரை இவளே. வாழ்வுக்கடலில் முளைத்த இன்பக் கமலமாக மதிக்கப்படுபவள். கடலிடை கமலத்தே இடம் கொண்டாள். மென்மை, செழிப்பு, சுந்தரம், தூய்மை, மங்கலம் அனைத்துக்கும் உருவான இருகமலங்களைக் கையிலும் தரித்து, மற்ற இரு கரகமலங்களால் அபயவரதம் காட்டும் பத்தினி இவளே.

இப்பொன்னிறப் பொன்னியை நான்கு யானைகள் எப்போதும் நீராட்டி, இவளது உள் குளுமையை வெளிக்காட்டுகின்றன. வறுமை மட்டுமின்றி அறிவு வறுமையையும் நீக்குவதில் ‘சரஸ்வதி’ அம்சமும் உட்கலந்தவள் ‘கமலாத்மிகா’. நீரிடை வாழும் மீனாக (மச்சாவதாரம்) வந்த திருமாலின் முதல் அவதாரத்துக்கு எழுச்சி தந்தவள்.

பலன்கள்: இந்த கமலாத்மிகா தேவியின் அருளால் உலகத்தில் நிகரற்ற செல்வத்தையும், சரீரத்தில் அழகையும், பதவியையும், ஆன்மிகத்துறையில் முன்னேற்றத்தையும் அடையலாம். வேத காலத்திலிருந்து அனைவராலும் வாழ்நாள் முழுவதும் உபாஸிக்கப்படும் தெய்வம் கமலாத்மிகா ஆவாள்

(தொடரும்...)



# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

**1.**ஸ்ரீ குருநாதர் மஹிமை

कृत्वा सतां हि संतापं शापं देहीति नो वदेत् ।
க்ரு’த்வா ஸதாம்’ ஹி ஸந்தாபம்’ ஶாபம்’ தே$^3$ஹீதி நோ வதே$^3$த் .



என்ற நியாயப்படி அந்த அர்ச்சகர்களுக்கு பலவிதமான கஷ்டங்கள் ஏற்பட்டன. பிற்பாடு அவர்களே ஸுப்ரஹ்மண்ய அய்யர், அவர் சிறிய தகப்பனார் சங்கரய்யர் முதலான பிரமுகர்களை அனுநயம் செய்துகொண்டு, ஸ்ரீமத் ஆசார்யார் ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்த இடத்திற்குச் சென்று பணிந்து தங்கள் அபசாரத்தை மன்னித்து அனுக்ரஹிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். பக்தஜனங்களுக்கு அதீனராகவும் கருணாமூர்த்தியாகவும் இருந்த ஸ்ரீமத் ஆசார்யார் மறுபடியும் மதுரைக்கு விஜயம் செய்து ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரர் ஆலயத்தில் தன் கையாலேயே விசேஷ பூஜாதிகள் செய்து முன்போல் பூர்ணகலையை ஏற்படுத்தி “இனி கிரமமாய் எல்லா ஜனங்களும் அர்ச்சகர் மூலமாகவே பூஜை செய்வித்து பிரஸாதம் பெறலாம்" என்று ஆக்ஞாபித்தார்கள். எந்த தினத்தில் ஸ்ரீமத் ஆசார்யார் தேங்காயில் கலாகர்ஷணம் செய்து மடத்திலேயே பூஜைசெய்ய ஆரம்பித்தார்களோ அதுமுதல் ஸ்ரீ சிருங்கேரி மடத்தில் பிரதி தினம் நடக்கும் ஸ்ரீ சந்திரமௌலீசுவரர் பூஜா ஸமயத்தில் ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரர்களுக்கும் நிவேதனம் நடத்தப்பட்டுவருகிறது.

இவ்விதமாக இவ்வாசார்யருடைய நிக்ரஹானுக்ரஹ சக்தி மிகவும் பிரஸித்தமாயிருந்தது. அப்படியே ஸத்யஸங்கல்பர் என்பதிலும் ஸந்தேகமில்லை. ஏதேனும் ஒரு கார்யம் செய்ய வேண்டுமென்று தோன்றிவிட்டால் அதைச் செய்தே தீரக்கூடிய தன்மையுள்ளவர். இந்த ஸ்ரீமத் ஆசார்யார் பேரில் அப்பொழுது மஹாராஜாவாக இருந்த மும்மடி ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் செய்திருக்கும் அஷ்டோத்தர சதநாமாவளியில்

प्रतिशातार्थसाधकः



ப்ரதிஶாதார்த2ஸாத4க:

என்ற நாமாவினால் எடுத்துக் காட்டியிருக்கிறார். வயதான பிறகு தனக்கு கொஞ்சம் காது கேட்கிறது குறைந்திருந்தபோது இவர்களே விளையாட்டாக சொல்வார்களாம்: "நான் சொல்வதை எல்லாரும் கேட்க வேண்டும், மற்றவர்கள் சொல்வது என் காதில் விழாது" என்று. இவ்விஷயத்தில் மற்றொரு ஸம்பவத்தையும் இங்கே குறிப்பிடலாமென்று நினைக்கிறேன். மேலே கண்ட அஷ்டோத்தர சதநாமாவளியை மஹாராஜா ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ஸமர்ப்பித்த போது அவர்கள் எவ்வித அபிப்பிராயமும் சொல்லாமலிருக்கையில் மஹாராஜா வற்புறுத்திக் கேட்டவுடன் ஸ்ரீமத் ஆசார்யார் "நன்றாயில்லை" என்று ஜாடை காட்டினார்கள். மஹாராஜா மிகவும் வருத்தத்துடன் "குறைகளை எடுத்துச் சொன்னால் திருத்திக் கொள்கிறேன்" என்றார். அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார் "என்னை உத்தேசித்து இந்த ஸ்தோத்திரம் எழுதும்போது மற்றவர்களுக்கு இல்லாமல் என்னிடம் மாத்திரம் இருக்கிற லக்ஷணத்தைக் கண்டு ஒரு நாமா சேர்த்தாலொழிய எனக்கென்று எப்படி தெரியும்?" என்று கேட்டார்கள். "எந்த நாமாவை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்திரவானால் சேர்த்துக்கொள்கிறேன்" என்றார் மஹாராஜா. அதற்கு ஆசார்யார் "சொல்கிறேன், ஆனால் நீங்கள் சேர்த்துக் கொள்ளமாட்டீர்கள்.

चण्डीश्वरकृपालब्धबाधिर्यपरिभूषितः
சண்டீ3ஶ்வரக்ரு'பாலப்3த4பா3தி4ர்யபரிபூ4ஷித:

(சண்டீசுவரருடைய கிருபையால் கிடைத்த செவிட்டுத் தனத்தால் அலங்கரிக்கப்பட்டவர்) என்று இருந்தால் எனக்குத் தான் இந்த ஸ்தோத்திரம் என்று நன்றாக விளங்கும்" என்று புன்சிரிப்புடன் சொன்னார்கள்.

ஒரு ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யார் ஸஞ்சாரக் கிரமத்தில் வீர சைவர் என்று சொல்லிக்கொள்கிற லிங்காயத்தார் வஸிக்கும் கிராமத்தின் பக்கமாக பல்லக்கில் போகும்படி ஏற்பட்டது. இதில் அந்த மதஸ்தர்களுக்கு இஷ்டமில்லாமல் சிலர் ஒளிந்திருந்து பல்லக்கின் பேரிலும், பரிஜனங்களின் பேரிலும் கற்களை எறியத் தலைப்பட்டார்கள். "கல் எறிகிறார்களே" என்று பரிஜனங்கள் பதறிப்போய் ஸ்ரீமத் ஆசார்யாரிடத்தில் முறையிட்டபோது "நன்றாய் எறி(ரி)யட்டும்" என்று அவர்கள் சொல்லி வாய் மூடுமுன் அந்த கிராமத்திலுள்ள வீடுகள் தீப்பற்றி எரிய ஆரம்பித்துவிட்டன. ஆசார்யாருக்கு அவ்விதம் நடக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாமலிருந்தும் அவர்களுடைய வாக்கு பலித்துவிட்டது. இதையே ஸத்யநிஷ்டையின் லக்ஷணமென்று பெரியோர் சொல்கிறார்கள்.

(தொடரும்....)



# श्रीमन्नारायणीयम्
# ஶ்ரீமந்நாராயணீயம்

## प्रथमस्कन्धपरिच्छेदः
## ப்ரத²மஸ்கந்த⁴பரிச்சே²த³꞉

### १. श्रीभगवन्महिमानुवर्णनम् (स्रग्धरा)
### 1. ஶ்ரீப⁴க³வன்மஹிமானுவர்ணனம் (ஸ்ரக்³த⁴ரா)

सान्द्रानन्दावबोधात्मकमनुपमितं कालदेशावधिभ्यां
निर्मुक्तं नित्यमुक्तं निगमशतसहस्रेण निर्भास्यमानम् ।
अस्पष्टं दृष्टमात्रे पुनरुरुपुरुषार्थात्मकं ब्रह्मतत्त्वं
तत्तावद्भाति साक्षाद्गुरुपवनपुरे हन्त भाग्यं जनानाम् ॥ १ ॥
विश्वस्मै नमः

ஸாந்த்³ரானந்தா³வபோ³தா⁴த்மகமனுபமிதம்' காலதே³ஶாவதி⁴ப்⁴யாம்'
நிர்முக்தம்' நித்யமுக்தம்' நிக³மஶதஸஹஸ்ரேண நிர்பா⁴ஸ்யமானம் ।
அஸ்பஷ்டம்' த்³ரு'ஷ்டமாத்ரே புனருருபுருஷார்தா²த்மகம்' ப்³ரஹ்மதத்த்வம்'
தத்தாவத்³பா⁴தி ஸாக்ஷாத்³கு³ருபவனபுரே ஹந்த பா⁴க்³யம்' ஜனானாம் ||1||
விஶ்வஸ்மை நம꞉



பரிபூர்ண ஞானமும் ஆனந்தமும் உருக்கொண்டதும், உவமையற்றதும், காலதேச எல்லையற்றதும், என்றும் பந்தமற்றதும், நூறாயிரக்கணக்கான வேத வாக்கியங்களால் விளக்கப்பட்டும் நன்கு விளங்காததுமாகிய பிரம்ம தத்வம் எதை தரிசித்த மாத்திரத்திலேயே பரம புருஷார்த்தம் அளிப்பதாக உளதோ அது தான் குருவாயூரில் நேரில் காணும்படி பாமர ஜனங்களின் பாக்கியமாகப் பிரகாசிப்பது. ஆச்சரியம்

விஸ்வம் = அனைத்தும் தாமாயிருப்பவர். பூர்ணமானவர் / உலகம்

एवं दुर्लभ्यवस्तुन्यपि सुलभतया हस्तलब्धे यदन्यत्
तन्वा वाचा धिया वा भजति बत जनः क्षुद्रतैव स्फुटेयम् ।
एते तावद्वयं तु स्थिरतरमनसा विश्वपीडापहत्यै
निश्शेषात्मानमेनं गुरुपवनपुराधीशमेवाश्रयामः ॥ २ ॥
विष्णवे नमः

ஏவம்' து³ர்லப்⁴யவஸ்துன்யபி ஸுலப⁴தயா ஹஸ்தலப்³தே⁴ யத³ன்யத்



தன்வா வாசா தி⁴யா வா ப⁴ஜதி ப³த ஜன꞉ க்ஷுத்³ரதைவ ஸ்பு²டேயம் |
ஏதே தாவத்³வயம்’ து ஸ்தி²ரதரமனஸா விஸ்வபீடா³பஹத்யை
நிஸ்ஸேஷாத்மானமேனம்’ கு³ருபவனபுராதீ⁴ஸமேவாஸ்ரயாம꞉ || 2 ||

விஷ்ணவே நம꞉

இங்ஙனம் அடைய முடியாத வஸ்து சுலபமாகக் கைக்குக் கிட்டியிருந்தும் உடலாலும் வாக்காலும் மனதாலும் அதை ஆராதிக்காமல் மனிதர்கள் வேறொன்றை நாடுவது அறியாத அற்பத்தனம் என்பது தெளிவு,கஷ்டம். நாம் அசையாத மனதுடன் உலகின் பீடைகளைப் போக்குவதற்காக அனைத்திற்கும் ஆத்மாவான இந்த குருவாயூர் அப்பனையே ஸேவிப்போமாக.

விஷ்ணு: = உள்ளும் வெளியும் பரவியிருப்பவர். எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர்.

सत्त्वं यत्तत्पराभ्यामपरिकलनतो निर्मलं तेन तावद्-
भूतैर्भूतेन्द्रियैस्ते वपुरिति बहुशः श्रूयते व्यासवाक्यम् ।
तत्स्वच्छत्वाद्यदच्छादितपरसुखचिद्गर्भनिर्भासरूपं
तस्मिन् धन्या रमन्ते श्रुतिमतिमधुरे सुग्रहे विग्रहे ते ॥ ३ ॥

वषट्काराय नमः

ஸத்த்வம்’ யத்தத்பராப்⁴யாமபரிகலனதோ நிர்மலம்’ தேன தாவத்³-
பூ⁴தைர்பூ⁴தேந்த்³ரியைஸ்தே வபுரிதி ப³ஹுஸ꞉ ஸ்ரூயதே வ்யாஸவாக்யம் |
தத்ஸ்வச்ச²த்வாத்³யத³ச்சா²தி³தபரஸுக²சித்³க³ர்ப⁴நிர்பா⁴ஸரூபம்’
தஸ்மின் த⁴ன்யா ரமந்தே ஸ்ருதிமதிமது⁴ரே ஸுக்³ரஹே விக்³ரஹே தே ||3||

வஷட்காராய நம꞉

மற்ற குணங்களுடன் கலவாத நிர்மலமான சுத்த ஸத்வம் எதுவோ அதனாலேயே உண்டான பஞ்சபூதங்களையும் இந்திரியங்களையும் கொண்டு உமது சரீரம் ஆக்கப்பட்டது என்று வியாஸர் கூறுவது அடிக்கடி கேட்கப்படுகிறது. மிகப்பரிசுத்தமாயிருப்பதால் உள்ளடங்கிய பரமானந்தமும் ஞானமும் மறைவு படாமல் பிரகாசிக்கும் உம்முடைய லீலா விக்ரஹத்தில், கேட்பதற்கும் சிந்திப்பதற்கும் இனிமையான எளிமையான அந்த ரூபத்தில், பாக்கியசாலிகள் எப்பொழுதும் தங்களை மறந்து ரமிக்கிறார்கள்.

வஷட்கார: = வஷட்காரமாயிருப்பவர். எல்லாவற்றையும் எல்லோரையும் தன் வசப்படுத்துபவர்.

(தொடரும்…)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்